**வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத்தேர்வும் பிரயோகப் பரீட்சையும் - 2017**

1) செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களால் 2017.02.09 ஆம் திகதி வட மாகாண சபை இணையத்தளம் மூலமாக கோரப்பட்ட **வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (தமிழ் மொழி மூலம்) – 2017 (II)** விளம்பரத்திற்கு அமைவாக, விண்ணப்பித்தவர்களில் வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தகைமை பெற்றவர்கள் என இனங்காணப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட 350 விண்ணப்பதாரர்களுக்குமான நேர்முகத் தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சை எதிர்வரும் **25.05.2017, 26.05.2017** ஆம் திகதிகளில் **காலை 8.30** மணி முதல் **செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் அமைந்துள்ள **வட மாகாண கல்வி அமைச்சில்** நடைபெறவுள்ளது. மேற்குறித்த தேர்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அவர்கள் அறிவித்துள்ளார்.

2) நேர்முகத்தேர்வுக்கு தோற்றும் விண்ணப்பதாரர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் மற்றும் அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

2.1 தேசிய அடையாள அட்டை (தேசிய அடையாள அட்டை இல்லாதவிடத்து செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது உமது ஆளடையாளத்தை நிரூபிக்கும் புகைப்படத்துடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணங்கள்.

2.2 பிறப்புப் பதிவுப் புத்தகம் (பெயரில் வித்தியாசமிருப்பின் சத்தியக் கடதாசி சமர்ப்பித்தல் வேண்டும்)

2.3 விவாகச் சான்றிதழ் (திருமணமான பெண்கள் மட்டும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்)

2.4 க.பொ.த.(சா/த) சான்றிதழ்

2.5 க.பொ.த.(உ/த) சான்றிதழ்

2.6 பட்ட விபரக் கூற்று (Statement / Transcript)

2.7 பட்டச் சான்றிதழ் (பல்கலைக்கழக மூதவையால் அங்கீகரிக்கப்பட்டு பதிவாளரால் ஒப்பமிடப்பட்ட பட்டச் சான்றிதழ் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்)

2.8 விரிவான பெறுபேற்று அட்டவணை (Detailed Results Sheet)

2.9 இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்

2.10 கிராம உத்தியோகத்தர்களால் வழங்கப்படும் வதிவிட, குணநலச் சான்றிதழ்

2.11 தேர்தல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ் **அல்லது** கிராம சேவையாளரால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளர் அவர்களால் மேலொப்பமிடப்பட்டு வழங்கப்பட்ட **"தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் விபரங்களை குறிப்பிட்டுக் கொள்வதற்காக வழங்கப்படும் படிவம்"** (உடன் முன்னரான 03 வருட காலத்திற்குரியதாக இருத்தல் வேண்டும்)

2.12 வேறு விசேட தகைமைகள் இருப்பின் அவை தொடர்பான சான்றிதழ்கள்

3) இந்நேர்முகத்தேர்வு தொடர்பாக பயணச் செலவு எதுவும் வழங்கப்படமாட்டாது. இவ்வழைப்பு விண்ணப்பதாரரது தகைமைகளைப் பரிசீலிப்பதற்காகவேயன்றி நியமனம் வழங்குவதற்காக அல்ல என்பதனையும் கவனத்திற் கொள்ளவும். நேர்முகத் தேர்வின்போது அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் நியமனத்திற்கான உத்தரவாதம் வழங்கப்படமாட்டாது. மேலும் உரிய தினத்தில் சமுகமளிக்கத் தவறும் பட்சத்தில் அவர்கள் இந் நியமனத்தை அவசியமற்றதெனக் கருதுவதாகத் தீர்மானித்து நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

4) கீழ்க் குறிப்பிடப்படும் அடிப்படையில் விண்ணப்பதாரர் நேர்முகத்தேர்வுக்கும் பிரயோகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுகின்றார்கள்.

1. விண்ணப்பதாரர் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பித்ததன் அடிப்படையில் தகைமைகளைப் பரிசீலிப்பதற்காக நேர்முகத்தேர்வுக்கும் பிரயோகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுகின்றார்கள்.

**பிரயோகப் பரீட்சை தொடர்பான விபரம் வருமாறு:**

i. பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் கீழ்க் குறிப்பிடப்படும் 05 தலைப்புக்களின் நோக்கத்தை பிரதிபலிக்கக்கூடிய வகையில் சமர்ப்பிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| **தொடர் எண்** | **பிரயோக பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள்** | **உயர்ந்த பட்ச புள்ளி அளவு** | **சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு** |
|---|---|---|---|
| **01** | நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| **02** | ஆளுமை மற்றும் நிர்வாகம் | 05 | 02 |
| **03** | தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் | 05 | 02 |
| **04** | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| **05** | சமர்ப்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **25** | **10** |

ii. பிரயோக பரீட்சை முறைகள்:

1. பிரயோக பரீட்சைக்காக 08 நிமிடங்கள் வழங்கப்படும்
2. பிரயோக பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய உயர்ந்த பட்ச புள்ளிகளின் அளவு 25 ஆகும்.
3. பிரயோக பரீட்சையில் சித்தியடைவதற்காக அவ்வவ் ஒப்பளவுகளுக்காக குறைந்த பட்சம் 2 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

iii. ஒப்பளவுகளின் நோக்கம்:

1. நோக்கம் மற்றும் பிரவேசம்
   வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தல் மற்றும் பாட பிரவேச இயலுமையினை மதிப்பீடு செய்தல்.
2. ஆளுமை மற்றும் நிர்வாகம்
   ஆசிரியராக சிறந்த ஆளுமை கொண்ட மற்றும் கற்பிப்பதற்கு சிறந்த நிர்வாகக் கட்டுப்பாடுகள் கொண்ட இயலுமைகள் காணப்படல்.
3. தொடர்பு சாதனம் தொடர்பான விளக்கம்
   கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உரிய விடயங்களை பயன்மிக்கதாக தெரிவிக்கக்கூடிய இயலுமையினை மதிப்பீடு செய்தல்.

4. நேர முகாமைத்துவம்
பெற்றுக்கொள்ளப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை எட்டக்கூடிய திறமைகளை மதிப்பீடு செய்தல்.
5. சமர்ப்பிப்பு கலைசார் முறைகள்
நோக்கத்தை எட்டுவதற்கான சமர்ப்பிப்புக்கள் கலைசார் முறைகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இயலுமைகளை மதிப்பீடு செய்தல்.

2. பத்திரிகை விளம்பரம் தொடர்பில் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களால் எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் தாங்கள் அமைந்தொழுகுதல் வேண்டும்.
3. நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை தொடர்பில் செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம் அவர்களால் எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் தாங்கள் அமைந்தொழுகுதல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் முறைகள்:
நேர்முகத்தேர்வில் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு தகுதி பெறும் விண்ணப்பதாரர் பிரயோகப் பரீட்சையிலும் வேண்டப்பட்ட புள்ளிகளைப் பெறும் சந்தர்ப்பத்தில் நியமனம் பெறுவதற்கான தகுதியினைப் பெற்றுக்கொள்வார்.

<u>குறிப்பு:</u>

1. விண்ணப்பதாரர்களுக்கான பிரயோகப் பரீட்சை தொடர்பாக நேர்முகத்தேர்வுக் கடிதத்துடன் விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பித்துள்ள பாடத்திற்கு அமைவாக அப் பாடத்திற்குரிய ஆசிரியத் தொழிலை ஆற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளாரா என்பதனை பரிசீலிக்கும் வகையில் மேலே 4.1.i. இல் தரப்பட்ட 5 விடயப்பரப்புக்களின் கீழ் பிரயோகப் பரீட்சை நடைபெறும்.
2. பிரயோகப் பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு – II இல் காட்டப்பட்டுள்ளது
3. இப் பிரயோகப் பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டை ஒத்த வடிவில் தயார்ப்படுத்தி வருகைதருதல் போதுமானதாகும். காட்சிப்படுத்தல் மூலம் விளங்கப்படுத்த விண்ணப்பதாரர் விரும்பினால் தாம் தெரிவு செய்த பகுதியை பிறிசில் போட் அல்லது காட் போட் அட்டை மூலமாக மட்டும் காட்சிப்படுத்தி விளங்கப்படுத்த முடியும்.
4. இதில் தெரிவிக்கப்படாத விடயங்கள் ஏதேனும் இருப்பின் அவை தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

## பிரயோகப் பரீட்சைக்கான பாடத்திட்டம்

| இல. | விண்ணப்பித்த பாடங்கள் | தயார் செய்ய வேண்டிய விடயப்பரப்பு |
|---|---|---|
| 1 | பௌதிகவியல் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2012 இல் மீள் பார்வை செய்யப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் (TIM) உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher instruction manual) |
| 2 | இரசாயனவியல் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2012 இல் மீள் பார்வை செய்யப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் (TIM) உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher instruction manual) |
| 3 | இணைந்த கணிதம் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2012 இல் மீள் பார்வை செய்யப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் (TIM) உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher instruction manual) |
| 4 | உயிரியல் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2012 இல் மீள் பார்வை செய்யப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் (TIM) உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher instruction manual) |
| 5 | பொறியியல் தொழில்நுட்பம் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2013 இல் மீள் பார்வை செய்யப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் (TIM) உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher instruction manual) |
| 6 | உயிரியல் தொழில்நுட்பம் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2013 இல் மீள் பார்வை செய்யப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் (TIM) உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher instruction manual) |
| 7 | தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் | தேசிய கல்வி நிறுவகத்தினால் க.பொ.த (உயர்தர) பாடத்திற்குரிய பாடத்திட்டத்தில் இருந்து தெரிவு செய்த அலகொன்றின் குறித்த ஒரு பாடப்பிரிவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2013 இல் மீள் பார்வை செய்யப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் (TIM) உதவியுடன் தெரிவு செய்யலாம். (Website – www.nie.lk - Downloads – Syllabus / Teacher instruction manual) |
| 8 | விஞ்ஞானம் | கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தரம் 09 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கான பாடப் புத்தகத்தில் ஏதேனுமொரு தரத்தில் இருந்து விரும்பிய ஒரு பாட அலகின் உப அலகு ஒன்றினை தெரிவு செய்யலாம் |
| 9 | கணிதம் | கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தரம் 09 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கான பாடப் புத்தகத்தில் ஏதேனுமொரு தரத்தில் இருந்து விரும்பிய ஒரு பாட அலகின் உப அலகு ஒன்றினை தெரிவு செய்யலாம் |

**குறிப்பு: ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பித்தோர், சகல பாடங்களுக்குமான பிரயோகத்தேர்வை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தலை மேற்கொண்டிருத்தல் வேண்டும். எனினும் விண்ணப்பித்த சகல பாடங்களுக்கும் பிரயோகப் பரீட்சைக்கு தோற்றுதல் அவசியமில்லை. நேர்முகத்தேர்வுக் குழுவினால் தங்களது கல்வித் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் அவர்களால் சிபார்சு செய்யப்படும் பாடத்திற்கு மாத்திரம் பிரயோகத்தேர்வை மேற்கொண்டால் போதுமானதாகும்.**